**<u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>**

**<u>அ.வ எண்: 159/2023 ஜெயா (வாசா1) தேதி: 24.03.2026.</u>**

**<u>வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

பிராது தபசில் சொத்து ஆழ்வார்நாயக்கருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். ஆழ்வார்நாயக்கர் இறப்பிற்க்குபின் அந்த சொத்தில் அவரது மனைவி கிருஷ்ணம்மாளுக்கும் பாகம் உள்ளது என்றால் சரிதான். 2020ம் வருடம் தான் கிருஷ்ணம்மாளின் உயில் பற்றி எனக்கு தெரிய வந்தது. கிருஷ்ணம்மாள் உயிருடன் இருக்கும் போது அடிக்கடி அவரை சென்று பார்த்தேன். கிருஷ்ணம்மாள் 2017ம் வருடம் இறந்துவிட்டார். கிருஷ்ணம்மாள் இறக்கும்போது சுயநினைவுடன் தான் இருந்தார் என்றால் இல்லை. கிருஷ்ணம்மாள் உயிருடன் இருக்கும்போது நான் அவரை சென்று பார்த்ததே கிடையாது என்றால் சரியல்ல. கிருஷ்ணம்மாள் உயிருடன் இருந்த போது எனது சகோதரர் 1ம் பிரதிவாதி தான் அவருக்கு தேவையான மருத்துவ செலவுகளை செய்து வந்தார் என்றால் இல்லை. எனது அத்தை தான் செலவுகளை செய்து வந்தார். எனது அத்தை 1ம் பிரதிவாதிக்கு பணம் அனுப்பி வைப்பார். எனது அத்தை அவ்வாறு பணம் அனுப்பிவைத்தது சம்பந்தமான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து 3ம் நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட விபரம் எப்போது தெரிய வந்தது என்றால் தற்போது தான் தெரிய வந்தது. தாவா சொத்து 3ம் நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட விபரம் இந்த வழக்கு தாக்கல் செயத் சமயத்திலே எங்களுக்கு தெரியும் என்றாலும் அதை மறைத்து இந்த வழக்கை

தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமான வில்லங்க சான்றிதழ் பிராதுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த வில்லங்க சான்றிதழில் 3ம் நபருக்கு தாவா சொத்து கிரையம் செய்யப்ப்டட விபரம் அதில் வந்ததா என்றால் அந்த விபரம் 2ம் வாதிக்கு தான் தெரியும். தாவா சொத்தை 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வரும் விபரம் எனக்கு தெரியும் என்றால் எனது அத்தையும் சேர்ந்து தான் அனுபவம் செய்து வருகிறார். 3ம் நபருக்கு ஏற்பட்ட கிரைய ஆவணங்கள் குறித்து பரிகாரம் கோரப்பட்டுள்ளதா என்றால் எனது சகோதரி 2ம் வாதிக்கு தான் அந்த விபரம் தெரியும். 3ம் நபருக்கு பெயரில் ஏற்பட்ட ஆவணங்கள் சம்பபந்தமாக எனது சகோதரிக்கு தான் தெரியும். எனக்கு தெரியாது. எனது சகோதரி 2ம் வாதி பி.காம் படித்துள்ளார். அவர் தற்போது திருவள்ளுவர் மாவட்ட நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார். கிருஷ்ணம்மான் எழுதி வைத்துள்ள உயில் பற்றி எனக்கும், என் சகோதரிக்கும் நன்கு தெரியும் என்றாலும், 1ம் பிரதிவாதியை கஷ்டபடுத்தும் நோக்கில் நானும், என் சகோதரியும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. நான் எனக்காகவும், இதர வாதிகளுக்காவும் சேர்ந்து தான் நிருபன வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 3ம் நபருக்கு கிரையம் செய்த சொத்துக்களில் எனக்கு என்ன பாகம் உள்ளதோ அதே பாக உரிமை 1ம் பிரதிவாதிக்கும் உள்ளது என்றால் சரிதான். உயில்படி 1ம் பிரதிவாதியை தவிர யாரும் தாவா சொத்தில் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. கிருஷ்ணம்மான் உயிருடன் இருக்கும் போதே அல்லது அவர் இறந்த பின்போ சொத்துக்களை நானோ, என் சகோதரியே விற்பனை செய்ய முயற்சி செய்தோமா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு

முன்பு நான், எனது தாயார் மற்றும் எனது சகோதரி தாவா சொத்தை விற்பனை செய்ய முயற்சி செய்தோம் என்றாலும் அதை தெரிந்து 1ம் பிரதிவாதி சார்பதிவாளர் அலுவலகத்தில் தடங்கல் மனு கொடுத்தார் என்றால் எனது அத்தை அனைத்து சொத்துகளையும் பாகம் பிரிக்க வேண்டும் என கூறினார். ஆனால் 1ம் பிரதிவாதி சொத்து அனைத்தும் அவருக்கு உரியது என கூறிவிட்டார். நான் எனது தாயார் எனது சகோதரி, எனது அத்தை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பாகப்பிரிவினை செய்ய சென்றோம். அப்போது எனது சகோதரர் 1ம் பிரதிவாதி உயில் ஆவணத்தை கொண்டு வந்து காண்பித்தார். சொத்துக்களை விற்பனை செய்ய முடியாததால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எவ்வளவு பாகம் கோரியுள்ளோம் என்றால் அனைவருக்கும ஒரு பாகம் வேண்டும் என கோரியுள்ளோம். கிருஷ்ணம்மாள் எழுதி வைத்த உயில்படி தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு உடமைப்பட்டது என்றால் சரியல்ல. கிருஷ்ணம்மாள் உயில் எழுதும்போது சுயநினைவுடன் இல்லை என்பது குறித்து மருத்துவ ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. உயில் ஆவணத்தை கண்ட சொத்தை தவிர இதர சொத்துக்களில் 1ம் பிரதிவாதிக்கு பாக உரிமை உள்ளது என்றால் எனக்கு என்ன பாகம் உள்ளதோ அதே பாகம் 1ம் பிரதிவாதிக்கும் உள்ளது. 1ம் பிரதிவாதிக்கு தபசில் சொத்தில் 5/12 பாகம் உள்ளது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு 4/8 பாகம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியை அலைகழிக்கும் நோக்கில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதாலும், இந்த வழக்கில் அடிப்படை முகாந்திரம் இல்லை

என்பதாலும் எங்கள் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.